# இலங்கைச் சனநாயக சோசலிசக் குடியரசின் வர்த்தமானப் பத்திரிகை

## *2015 ஆம் ஆண்டு மே மாதம் 29 ஆம் திகதிய பகுதி II இற்குக் குறைநிரப்பி*

*(2015.06.01 ஆம் திகதியன்று வெளியிடப்பட்டது)*


# ஊழியர் வரவு செலவுத்திட்ட நிவாரணக் கொடுப்பனவு

*(தனியார் உறுப்பினர் சட்டமூலம்)*

***இலங்கைச் சனநாயக சோசலிசக் குடியரசின் நிதி அமைச்சர் இடைக்கால வரவு செலவுத் திட்டத்தை சமர்ப்பித்து 2015.01.29 ஆம் திகதி இலங்கைப் பாராளுமன்றத்தில் தெரிவித்த கூற்றில் உள்ளடங்கியுள்ள தனியார்துறையின் சம்பளம் மற்றும் படிகளின் பொருட்டு ஊழியர் ஒருவரின் மாதச் சம்பளத்தை ரூபா 2500/- ஆல் அதிகரிக்கும் படியான முன்மொழிவை நடைமுறைப்படுத்தும் பொருட்டும் ஒரு சில வகையினதான ஊழியர்களுக்கு தொழிலதிபர்கள் வரவு செலவுத்திட்ட நிவாரணக் கொடுப்பனவொன்றை செலுத்தும் பொருட்டும் அதற்கு இடைநேர்விளைவான கருமங்களின் பொருட்டும் ஏற்பாடு செய்வதற்குமானதொரு சட்டமூலம்***

*காலி மாவட்டப் பாராளுமன்ற உறுப்பினர் கௌரவ அஜித்குமார அவர்களால் பாராளுமன்றத்தில் சமர்ப்பிக்கப்படவுள்ளது*


*இலங்கை அரசாங்க அச்சுத் திணைக்களத்தில் பதிப்பிக்கப்பெற்றது*

*கொழும்பு 5, அரசாங்க வெளியீட்டலுவலகத்தில் பெற்றுக்கொள்ளலாம்*

**விலை : ரூபா *13.00***　　　　**தபாற் செலவு : ரூபா *10.00***

**ஊழியர் வரவு செலவுத் திட்ட நிவாரணக் கொடுப்பனவு**

**இலங்கைச் சனநாயக சோசலிசக் குடியரசின் நிதி அமைச்சர் இடைக்கால வரவு செலவுத் திட்டத்தை சமர்ப்பித்து 2015.01.29 ஆம் திகதி இலங்கைப் பாராளுமன்றத்தில் தெரிவித்த கூற்றில் உள்ளடங்கியுள்ள தனியார் துறையின் சம்பளம் மற்றும் படிகளின் பொருட்டு ஊழியர் ஒருவரின் மாதச் சம்பளத்தை ரூபா 2500/- ஆல் அதிகரிக்கும்படியான முன்மொழிவை நடைமுறைப்படுத்தும் பொருட்டும் ஒரு சில வகையினதான ஊழியர்களுக்கு தொழிலதிபர்கள் வரவு செலவுத்திட்ட நிவாரணக் கொடுப்பனவொன்றை செலுத்தும் பொருட்டும் அதற்கு இடைநேர்விளைவான கருமங்களின் பொருட்டும் ஏற்பாடு செய்வதற்குமானதொரு சட்டம்**

இலங்கைச் சனநாயக சோசலிசக் குடியரசின் பாராளுமன்றத்தினால் பின்வருமாறு சட்டமாக்கப்படுவதாகுக :-

*சுருக்கப் பெயர்.*

**1.** இச்சட்டம், 2015 ஆம் ஆண்டின் ஆம் இலக்க, ஊழியர் வரவு செலவுத்திட்ட நிவாரணக் கொடுப்பனவுச் சட்டம் என எடுத்துக்காட்டப்படலாம் என்பதுடன், (இதனகத்துப் பின்னர் "நிர்ணயிக்கப்பட்ட திகதி" எனக் குறிப்பீடு செய்யப்படும்) 2015, மே மாதம் 01 ஆம் திகதி முதல் அது நடைமுறைக்கு வருவதாகக் கருதப்படுதலும் வேண்டும்.

*தகுதி வாய்ந்த அதிகாரி.*

**2.** (1) இச்சட்டத்தின் கருமங்களுக்காக ஆணையாளர் தகுதி வாய்ந்த அதிகாரியாவார்.

(2) இச்சட்டத்தின் மூலம் தகுதிவாய்ந்த அதிகாரிக்கு ஒப்படைக்கப்பட்ட அல்லது விதந்துரைக்கப்பட்ட ஏதேனுமொரு அதிகாரத்தை, அலுவலை அல்லது கருமத்தை தொழிற்திணைக்களத்தின் எவரேனுமொரு அலுவலருக்கு அத்தகைய அதிகாரியினால் ஒப்படைக்கப்படுவதற்கு இயலுமானதாதல் வேண்டும்.

*வரவு செலவுத் திட்ட கொடுப்பனவை செலுத்துதல்.*

**3.** (1) 2015, மே மாதம் 1 ஆம் திகதி முதல் நடைமுறைக்கு வருகின்றவாறு ஏதேனுமொரு கைத்தொழிலின் மற்றும் எந்தவொரு சேவை இடத்தினதும் ஒவ்வொரு தொழிலதிபரும், ஒவ்

2-PL 009063 -325(2015/05)

வொரு ஊழியருக்கும் ஒவ்வொரு மாதத்திலும் மாதாந்த அடிப்படைச் சம்பளம் நாற்பதாயிரம் ரூபாவை விஞ்சாத பட்சத்தில், “வரவு செலவுத் திட்ட நிவாரணக் கொடுப்பனவு” எனச் சட்டத்தில் குறிப்பிடப்படுகின்ற ரூபா இரண்டாயிரத்து ஐந்நூறுக்குக் குறையாததொரு கொடுப்பனவை நிர்ணயிக்கப்பட்ட திகதியிலிருந்து செலுத்துதல் வேண்டும்.

ஆயினும்,

(அ) அத்தகைய தொழிலதிபர் தேயிலை பயிரிடும் மற்றும் உற்பத்தி செய்யும் கைத்தொழிலில் அல்லது இறப்பர் பயிரிடும் மற்றும் உற்பத்தி செய்யும் கைத்தொழிலில் அல்லது கொக்கோவா, ஏலக்காய் மற்றும் மிளகு பயிரிடும் மற்றும் உற்பத்தி செய்யும் கைத்தொழிலில் அல்லது தெங்கு பயிரிடும் கைத்தொழிலில் அல்லது கறுவா அல்லது புகையிலைக் கைத்தொழிலில் ஈடுபடுகின்ற தொழிலதிபராக உள்ளதொரு சந்தர்ப்பத்தில், ஒவ்வொரு ஊழியருக்கும் செலுத்த வேண்டிய வரவு செலவுத்திட்ட நிவாரணக் கொடுப்பனவானது, மாதத்தினுள் அத்தகைய ஊழியர் வேலை செய்துள்ள நாட்களின் எண்ணிக்கைக்கான சம்பளமாக அத்தகைய ஊழியருக்கு செலுத்த வேண்டியதான தொகையில் இருபது சதவீதம் அல்லது ரூபா இரண்டாயிரத்து ஐந்நூறு ஆகிய இரண்டில் குறைந்த தொகையாயிருத்தல் வேண்டுமென்பதோடு, அத்தகைய தொழிலதிபரால் தொழிலில் ஈடுபடுத்தப்பட்டுள்ள ஊழியர்களின் எண்ணிக்கையைப் பொருட்படுத்தாது அக்கொடுப்பனவு செலுத்தப்படுதல் வேண்டும் ; மேலும்

(ஆ) அத்தகைய தொழிலதிபர் ஒரு கூட்டுறவுச் சங்கமாக உள்ளவிடத்து, அத்தகைய கூட்டுறவுச் சங்கத்தினால் சேவையில் ஈடபடுத்தப்பட்டுள்ள ஊழியர்களின் எண்ணிக்கையைப் பொருட்படுத்தாது வரவு செலவுத்திட்ட நிவாரணக் கொடுப்பனவு செலுத்தப்படுதல் வேண்டும். அமைய ஊழியர்களைப் பொறுத்தவரை இக்கொடுப்பனவானது அத்தகைய ஊழியர் அந்த மாதத்தில் வேலை செய்துள்ள நாட்களின் எண்ணிக்கையின் விகிதாசாரத்தின்படி அமைதல் வேண்டும்.

(2) துண்டு அளவுகளின்படி அல்லது நாட்களின் எண்ணிக்கையின்படி அல்லது கொடுப்பனவு அடிப்படையில் ஊழியர் ஒருவர் சேவையில் ஈடுபடுத்தப்பட்டுள்ளபோது இச்சட்டத்தின்கீழ் செலுத்தப்படற்பாலதான வரவு செலவுத்திட்ட நிவாரணக் கொடுப்பனவானது, சந்தர்ப்பத்திற்கேற்ப, துண்டு அளவுகளின்படி அல்லது நாட்களின் எண்ணிக்கையின்படி அல்லது கொடுப்பனவு அடிப்படையில் அவருக்குச் செலுத்தப்பட வேண்டியதான சம்பளத்தில் இருபது சதவீதத்திற்குக் குறைவாயில்லாததொரு தொகையாதல் வேண்டும். எனினும், இந்த உபபிரிவின் கீழ் செலுத்தப்பட வேண்டியதான தொகை மாதத்திற்கு ரூபா இரண்டாயிரத்து ஐந்நூறைத் தாண்டாதிருத்தல் வேண்டும்.

(3) இப்பிரிவின் மேலே காணப்படுகின்ற ஏற்பாடுகளில் எது எவ்வாறு குறிப்பிடப்பட்டிருப்பினும், வரவு செலவுத் திட்ட நிவாரணக் கொடுப்பனவானது,-

(அ) 1963 ஆம் ஆண்டின் 4 ஆம் இலக்க, உண்ணாட்டரசிறைச் சட்டத்தின் 16 (அ) ஆவது பிரிவின்கீழ் அங்கீகரிக்கப்பட்ட அறக்கொடை நிறுவனமாகப் பிரகடனப்படுத்தப்பட்டுள்ள நிறுவனமொன்றில் சேவையில் ஈடுபட்டுள்ள;

(ஆ) 1971, செத்தெம்பர் மாதம் 10 ஆம் திகதிய 14975 ஆம் இலக்க, வர்த்தமானப் பத்திரிகையில் வெளியிடப்பட்டுள்ள ஏதேனுமொரு கூட்டு ஒப்பந்தம் தொடர்பில் கைத்தொழில் பிணக்குகள் சட்டத்தின் 10 (2) ஆம் பிரிவின்கீழ் விதிக்கப்பட்டுள்ள கட்டளையொன்றின் மூலம் அத்தகைய தொழிலதிபர் பிணைக்கப்பட்டுள்ள மற்றும் அத்தகைய தொழிலதிபரால் அத்தகைய ஏதேனுமோர் ஒப்பந்தத்தின் பிரகாரம் சம்பளம் மற்றும் வாழ்க்கைச் செலவுப் பணிக்கொடுப்பனவு செலுத்தப்படுகின்ற,

எவரேனுமோர் ஊழியருக்கு செலுத்தப்படுதலாகாது.

**4.** (அ) எழுத்து மூலமான வேறு ஏதேனுமொரு சட்டத்தில், கூட்டு ஒப்பந்தத்தில் அல்லது வாய்மூலமான அல்லது எழுத்து மூலமான அல்லது வெளிப்படுத்தப்பட்ட அல்லது மறை முகமான ஏதேனும் தொழில்நிலை ஒப்பந்தத்தில் எது எவ்வாறு குறிப்பிடப்பட்டிருந்த போதிலும் இச்சட்டத்தின் ஏற்பாடுகள் செல்லுபடியானதும் தத்துவம் கொண்டதுமாயிருத்தல் வேண் டும். மேலும் இதன்படி இச்சட்டத்தின் ஏற்பாடுகளுக்கும் அத்தகைய வேறு சட்டம் அல்லது ஒப்பந்தத்திற்கும் இடையே முரண்பாடு அல்லது பொருந்தாத்தன்மை எதுவும் காணப்படு மிடத்து, அத்தகைய பொருந்தாத்தன்மையின் அளவுக்கேற்ப இச்சட்டத்தின் ஏற்பாடுகள் அத்தகைய வேறு சட்டத்தை அல்லது ஒப்பந்தத்தை விஞ்சியதாக அமுலாக்கப்படுதல் வேண்டும்.

(ஆ) கூட்டு ஒப்பந்தத்தின்படி அல்லது ஊழியர் தொழிலதிபர் தொடர்புகளுக்கு ஏற்புடைய வேறு ஏதேனுமொரு இணக்கப்பாட் டின்கீழ் இச்சட்டம் அமுலுக்குவரும் திகதி தொடக்கம் ஓராண்டு காலத்திற்கு ஏற்புடையதானவாறு ரூபா இரண்டாயிரத்து ஐந்நூறுக்கு குறையாததொரு தொகையினால் அடிப்படைச் சம்பளம் அதிகரிக்கப்பட்டுள்ளவிடத்து இச்சட்டத்தின் ஏற்பாடுகள் குறித்த சம்பள அதிகரிப்பு மேற்கொள்ளப்படும் திகதியிலிருந்து அமுலாதலாகாது.

(இ) கூட்டு ஒப்பந்தத்தின்படி அல்லது ஊழியர் தொழிலதிபர் தொடர்புகளுக்கு ஏற்புடையதான வேறு ஏதேனுமொரு இணக்கப் பாட்டின்கீழ் இச்சட்டம் அமுலுக்குவரும் திகதி தொடக்கம் ஓராண்டு காலத்திற்கு ஏற்புடையவாறு ரூபா இரண்டாயிரத்து ஐந்நூறுக்கு மேற்படாதவொரு தொகையினால் அடிப்படைச் சம்பளம் அதிகரிக்கப்பட்டுள்ளவிடத்து, அத்தகைய சம்பள அதிகரிப்பு மேற்கொள்ளப்படும் நாள் முதல் இதில் குறிப்பிடப் பட்டுள்ள ஓராண்டு காலத்திற்கு ஏற்புடையதாக, குறித்த அடிப் படைச் சம்பள அதிகரிப்புக்கும் ரூபா இரண்டாயிரத்து ஐந்நூறுக்கும் இடையிலான தொகை மேலதிகக் கொடுப்பனவாக ஊழியர்களுக்குச் செலுத்தப்படுதல் வேண்டும்.

(ஈ) மேலே குறிப்பிடப்பட்டுள்ள ஏற்பாடுகளின் பிரகாரம் அடிப் படைச் சம்பள அதிகரிப்பொன்று இச்சட்டம் அமுலுக்கு வருகின்ற தினத்திலிருந்து ஒரு வருட காலத்தினுள் நடைபெறுவதற்கு

உத்தேசமாயுள்ளதொரு சந்தர்ப்பத்தில் குறித்த அடிப்படைச் சம்பள அதிகரிப்பு நடைபெறும் வரையிலான காலகட்டத்திற்காக ரூபா இரண்டாயிரத்து ஐந்நூறு கொடுப்பனவு முழுமையாகச் செலுத்தப்படுதல் வேண்டும்.

(உ) மேற்படி ஏற்பாடுகளின் பிரகாரம் செலுத்தப்பட வேண்டிய ரூபா இரண்டாயிரத்து ஐந்நூறு கொடுப்பனவானது ஊழியரின் முழுச் சேவைக் காலத்திற்கும் ஏற்புடையதானதொரு கொடுப்பனவாகும் என்பதோடு குறித்த ஊழியருக்கு ஏற்புடையதாக சட்டத்தினால் விதிக்கப்பட்டுள்ள குறைந்தபட்ச சம்பளத்திற்கு கட்டாயமானதொரு மேலதிகத் தொகையாக அமைதல் வேண்டுமென்பதோடு, இது இவ்வாறே இச்சட்டம் அமுலுக்கு வருகின்ற தினத்திற்குப் பின்னர் ஆட்சேர்க்கப்படும் அனைத்து ஊழியர்களினதும் சட்ட ரீதியான குறைந்தபட்ச சம்பளத்திற்கு மேலதிகக் கொடுப்பனவொன்றாக நடைமுறைப்படுத்தப்படுதலும் வேண்டும்.

**5.** குறித்த தினத்திற்கு முன்னரான தினத்தில், எவரேனுமொரு தொழிலதிபரால் இச்சட்டத்தில் குறிப்பிடப்பட்டுள்ள கைத்தொழில்களில் ஏதேனுமொரு கைத்தொழிலில் அல்லது வேறு ஏதேனுமொரு தொழில் நிலையத்தில் தொழிலில் ஈடுபடுத்தப்பட்டுள்ள பயிற்சிபெறாத ஊழியர் உட்பட ஒவ்வொரு ஊழியரும் அந்தத் தொழிலதிபரின் ஊழியராக அவர் தொடர்ச்சியாகச் சேவையாற்றுகின்ற வரை, குறித்த தினத்திற்கு முன்னரான தினத்தில் அந்த ஊழியர் அனுபவித்து வந்த, ஆயினும் பொதுமக்கள் பாதுகாப்புச் சட்டத்தின் 5 ஆவது பிரிவின்கீழ் ஆக்கப்பட்ட அவசரகால ஒழுங்குவிதிகளின்கீழ் அவருக்குச் செலுத்தப்பட்ட ஏதேனும் கொடுப்பனவல்லாத சம்பளத்திற்கு, கொடுப்பனவுகளுக்கு அல்லது எந்தவொரு பெயர் மகுடத்தினாலும் அழைக்கப்படும் பணத்தினால் செலுத்தப்பட்ட வேறேதேனும் கொடுப்பனவுகளுக்கு ஏற்புடையதான விதிகள் மற்றும் நிபந்தனைகளுக்குக் குறையாத அனுகூலங்களுடன் கூடியதான விதிகள் மற்றும் நிபந்தனைகளின் மீது, அத்தகைய தொழிலதிபரால் அவ்வாறு தொடர்ச்சியாக சேவையில் ஈடுபடுத்தப்படல் வேண்டுமென்பதோடு இச்சட்டத்தின் மேலே குறிப்பிடப்பட்டுள்ள ஏற்பாடுகளின்கீழ் செலுத்தப்பட வேண்டிய கொடுப்பனவுகள் அத்தகைய சம்பளம், கொடுப்பனவுகள் மற்றும் வேறு கொடுப்பனவுகளுக்கு மேலதிகமானதாதலும் வேண்டும்.

**6**. (1) ஏதேனுமொரு கைத்தொழிலின் ஊழியரது தொழிலதிபரினால் அத்தகைய கைத்தொழிலில் ஈடுபடுத்தப்பட்டுள்ள ஊழியர் ஒருவர் தொடர்பில் -

(அ) தொழிலில் ஈடுபடுத்தப்பட்டுள்ள ஒவ்வொரு ஊழியரினதும் பெயர் ;

(ஆ) அத்தகைய ஒவ்வொரு ஊழியரினாலும் நிறைவேற்றப்படுகின்ற வேலையின் வகை ; மற்றும்

(இ) இச்சட்டத்தின் ஏற்பாடுகளுக்கமைய அத்தகைய ஒவ்வொரு ஊழியருக்கும் செலுத்தப்படுகின்ற பணத் தொகை,

ஆகியவற்றைக் காட்டுகின்ற பதிவேடொன்று, அத்தகைய கைத்தொழில் கொண்டு நடாத்தப்படுவது எவ்விடத்திலோ அவ்விடத்தில் பேணிவரப்படுதல் வேண்டும்.

(2) தொழிலதிபர் என்ற வகையில் (1) ஆவது உபபிரிவின்கீழ் குறிப்பிட்டதொரு அறிக்கையை பேணிவருகின்ற அல்லது பேணி வந்த ஒவ்வொரு ஆளும், இச்சட்டத்தின்கீழ் அத்தகைய அறிக்கையைப் பேணி வருவதற்கு எந்தத் தினத்திலிருந்து விதந்துரைக்கப்பட்டுள்ளதோ அந்தத் தினத்திலிருந்து நான்கு ஆண்டு காலத்திற்கு அத்தகைய அறிக்கையைப் பாதுகாப்பாக வைத்திருத்தல் வேண்டுமென்பதோடு, பரிசோதிப்பதற்காக அந்த அறிக்கையை சமர்பிக்குமாறும் அந்த அறிக்கையின் உண்மையான பிரதியொன்றை வழங்குமாறும் அல்லது அத்தகைய பிரதியொன்றை தயாரித்துக் கொள்வதற்கு இடமளிக்குமாறும் ஆணையாளரால் பணிக்கப்பட்டுள்ளபோது, அவ்வாறு செயலாற்றுதல் வேண்டும்.

தகுதி வாய்ந்த அதிகாரியின் தத்துவங்கள்.

**7**. தகுதி வாய்ந்த அதிகாரியானவர் ,-

(அ) ஏதேனுமொரு பதிவேட்டை அல்லது வேதனங்கள் பற்றிய அறிக்கையை பரிசோதிப்பதற்கு அல்லது இச்சட்டத்தின் ஏற்பாடுகளின் பிரகாரம் செயலாற்றப்

படுகின்றதா என்பதை சந்தேகமின்றி அறிந்து கொள்ளும் கருமத்தின் பொருட்டு அல்லது இச்சட்டத்தில் குறிப்பிடப்பட்டுள்ள ஊழியர்கள் சேவையில் ஈடுபடுத்தப்பட்டுள்ள ஏதேனுமொரு இடத்திற்கு, பகல் அல்லது இரவு காலத்தில் அனைத்து நியாயமான நேரங்களிலும் உட்பிரவேசித்து அவ்விடத்தை பரிசோதிப்பதற்கு; அல்லது

(ஆ) தாம் அவ்விடத்தை பரிசோதிக்கின்றபோது பரிசோதிப்பதற்காக அத்தகைய ஏதேனும் அறிக்கை அல்லது பதிவேடு சமர்ப்பிக்கப்படாதுள்ளபோது, அத்தகைய பதிவேட்டை அல்லது அறிக்கையை குறிப்பிட்டதொரு பின்னரான திகதியில பரிசோதிப்பதற்காக அவ்விடத்தில், தனது அலுவலகத்தில் சமர்ப்பிக்குமாறு கட்டளையிடுவதற்கு ; அல்லது

(இ) அத்தகைய ஏதேனும் முழுமையான பதிவேட்டின் அல்லது அறிக்கையின் அல்லது அதன் குறிப்பிட்டதொரு பகுதியின் பிரதியெடுப்பதற்கு ; அல்லது

(ஈ) அத்தகைய சேவை நிலையத்தில் தமக்கு காணக்கிடைக்கின்றதும் அவ்விடத்தில் பேணிவரப்படுகின்ற ஏதேனும் கைத்தொழிலில் ஈடுபட்டுள்ள தொழிலதிபராக அல்லது இன்றேல் அவ்விடத்தில் பேணிவரப்படுகின்ற ஏதேனும் கைத்தொழிலில் அல்லது வேறு ஏதேனுமொரு சேவை நிலையத்தில் சேவையில் ஈடுபடுத்தப்பட்டுள்ள ஊழியர் ஒருவராக கருதுவதற்கு தமக்கு நியாயமான காரணம் உள்ளதுமான ஆள் எவரையும் விசாரிப்பதற்கு ; அல்லது

பதிவேட்டைப் பேணிவருதல் தொழிலதிபரின் கடமையாகும்.

(உ) இச்சட்டம் ஏற்புடையதான எவரேனுமொரு தொழிலதிபருக்கு,-

(i) அத்தகைய எவரேனுமொரு தொழிலதிபரால் சேவையில் ஈடுபடுத்தப்பட்டுள்ள அனைத்து ஊழியர்களுக்கும் அல்லது அத்தகைய ஊழியர்

களை உள்ளடக்கிய ஏதேனும் குறிப்பிட்ட வகுப்புக்கு அல்லது வகைக்கு ஏற்புடையதானதும் இச்சட்டத்தின் கருமங்களுக்காக தம்மால் விதிக் கப்படுகின்ற விபரங்கள் அடங்கியதுமான பருவ அறிக்கையொன்றை ;

(ii) அத்தகைய எவரேனுமொரு தொழிலதிபரால் வழங்கப்படுகின்ற பருவ அறிக்கையில் குறிப் பிடப்பட்டுள்ள ஏதேனும் விபரங்கள் தொடர்பில் தாம் விதிக்கின்ற தகவலை அல்லது விளக் கத்தை; அல்லது

(iii) அத்தகைய எவரேனுமொரு தொழிலதிபரால் பேணிவரப்படுகின்ற ஏதேனும் முழுமையான பதிவேட்டின் அல்லது அறிக்கையின் அல்லது அதன் குறிப்பிட்டதொரு பகுதியின் உண்மையான பிரதியொன்றை,

குறிப்பிட்டதொரு திகதியில் அல்லது அதற்கு முன்னர் தமக்கு சமர்ப்பிக்குமாறு ஆவணமொன்றின் மூலம் கட்டளை யிடுவதற்கான தத்துவமுடையவராயிருத்தல் வேண்டும்.

தவறுகளும் தண்டனையும்.

**8.** குறிப்பிட்ட தினத்தில் அல்லது அதன் பின்னர்,-

(அ) 6 ஆவது பிரிவின் ஏற்பாடுகளின்படி செயலாற் றத் தவறுகின்ற; அல்லது

(ஆ) 7 ஆவது பிரிவின் கீழ் ஏதேனுமொரு உட்பிரவே சித்தலை அல்லது பரிசோதிப்பதற்கு அல்லது தகுதிவாய்ந்த அதிகாரியின் தத்துவத்தை நடை முறைப்படுத்துவதற்கு அல்லது தேவையான வாறு அவருக்கு அவசியமான ஏற்பாடுகளைச் செய்வதற்குத் தவறுகின்ற; அல்லது

(இ) 7 ஆவது பிரிவின் மூலம் ஒப்படைக்கப்பட்டுள்ள தத்துவங்களை அமுலாக்குகின்றபோது அத்தகைய அதிகாரிக்கு தடையேற்படுத்துகின்ற அல்லது தொந்தரவு கொடுக்கின்ற; அல்லது

(ஈ) 7 ஆவது பிரிவின் மூலம் ஒப்படைக்கப்பட்டுள்ள தத்துவங்களின் கீழ் சமர்ப்பிக்குமாறு அல்லது அத்தகைய அதிகாரி தமக்கு கட்டளையிடுகின்ற ஏதேனுமொரு பதிவேட்டை அல்லது வேதனங்கள் பற்றிய அறிக்கையை சமர்ப்பிப்பதற்கு அல்லது ஏதேனுமொரு தகவலை வழங்குவதற்கு நிராகரிக்கின்ற; அல்லது

(உ) ஏதேனுமொரு முக்கியமான விபரம் தொடர்பில் போலியான ஏதேனும் பதிவேட்டை அல்லது வேதனங்கள் பற்றிய அறிக்கையைத் தயாரிக்கின்ற அல்லது தயாரிப்பதற்கு ஏற்பாடு செய்கின்ற அல்லது 7 ஆவது பிரிவின் மூலம் ஒப்படைக்கப்பட்டுள்ள தத்துவங்களின்கீழ் செயலாற்றுகின்ற அத்தகைய அதிாரிக்கு ஏதேனுமொரு பதிவேட்டை அல்லது அறிக்கையை அது போலியானதென அறிந்துகொண்டே சமர்ப்பிக்கின்ற அல்லது சமர்பிப்பதற்கு ஏற்பாடு செய்கின்ற அல்லது அறிந்துகொண்டே சமர்ப்பிப்பதற்கு இடமளிக்கின்ற ; அல்லது

(ஊ) 7 ஆவது பிரிவின்கீழ் அத்தகைய அதிகாரியினால் வழங்கப்பட்ட ஏதேனுமொரு கட்டளையின்படி செயலாற்றத் தவறுகின்ற அல்லது மேற்கூறிய 7 ஆவது பிரிவின்கீழ் பருவ அறிக்கையொன்றை சமர்ப்பிக்குமாறு வேண்டப்பட்டுள்ள போது, போலியான பருவ அறிக்கையொன்றை அல்லது ஏதேனும் போலியான கூற்று உள்ளடங்கிய பருவ அறிக்கையை அறிந்துகொண்டே சமர்ப்பிக்கின்ற அல்லது வழங்கின்ற அல்லது சமர்ப்பிப்பதற்கு ஏற்பாடு செய்கின்ற,

ஆள் ஒவ்வொருவரும் தவறொன்றைப் புரிகின்றார் என்பதோடு, நீதிவான் ஒருவர் முன்னிலையில் தவறாளியாக்கப்படுகின்ற போது ரூபா ஒரு இலட்சத்தைத் தாண்டாத அபராதத்திற்கு அல்லது ஆறு மாதங்களைத் தாண்டாதொரு காலத்திற்கு இரு வகையில் ஒரு வகையான சிறைத் தண்டனைக்கு அல்லது அத்தகைய அபராதம் மற்றும் சிறைத்தண்டனை ஆகிய இரண்டு தண்டனைகளுக்கும் ஆளாதல் வேண்டும்.

தொழில் நிலை தொடர்ச்சியாக இருத்தல் தொடர்பிலான விசேட ஏற்பாடுகள்.

**9**. 3 ஆவது பிரிவின்கீழ் ஊழியர் ஒருவருக்கு கிடைக்க வேண்டியதான ஏதேனுமொரு பணத்தொகை எழுத்து மூலமான ஏதேனுமொரு சட்டத்தின் அனைத்து கருமங்களுக்காகவும் அல்லது அல்லாவிடினும் அவரது வேதனங்களின் ஒரு பகுதியாகக் கருதப்படுதல் வேண்டுமென்பதோடு, அதன்படி அத்தகைய ஊழியர் ஒருவரின் ஒவ்வொரு தொழிலதிபரும் அத்தகைய ஊழியரின் வேதனங்களைச் செலுத்துவதற்கு தாம் உள்ளாகின்ற காலகட்டத்தினுள் அத்தகைய பணத்தொகையை செலுத்துதல் வேண்டும்.

ஊழியர்களுக்கு கிடைக்க வேண்டிய பணத்தை செலுத்தத் தவறுதல், சில சந்தர்ப்பங்களில் ஊழியர்களுக்கு கிடைக்க வேண்டிய பணத்தை அறவிடுதல்.

**10**. (1) இச்சட்டத்தின்கீழ் தமது ஊழியர் ஒருவருக்கு செலுத்தப்பட வேண்டுமென விதிக்கப்பட்டுள்ள ஏதேனுமொரு பணத்தொகையை செலுத்தத் தவறுகின்ற எவரேனுமொரு தொழிலதிபர் தவறொன்றைப் புரிகின்றார் என்பதோடு, நீதிவான் ஒருவர் முன்னிலையில் தவறாளியாக்கப்படுகின்றபோது ரூபா ஓர் இலட்சத்தைத் தாண்டாத அபராதத்திற்கு அல்லது ஆறு மாதங்களைத் தாண்டாதொரு காலத்திற்கு இருவகையில் ஒருவகையான சிறைத்தண்டனைக்கு அல்லது அத்தகைய அபராதம் மற்றும் சிறைத்தண்டனை ஆகிய இரண்டு தண்டனைகளுக்கும் ஆளாதல் வேண்டும்.

(2) இச்சட்டத்தின்கீழ் எவரேனுமொரு தொழிலதிபரால் ஊழியர் ஒருவருக்குச் செலுத்தப்பட வேண்டுமென விதிக்கப்பட்டுள்ள ஏதேனுமொரு பணத்தொகையை செலுத்துவதை தொழிலதிபர் தவறவிடுவதன் காரணத்தினாலான தவறொன்று தொடர்பில் அத்தகைய தொழிலதிபர் நீதவான் நீதிமன்றத்தின் மூலம் தவறாளியாக்கப்பட்டுள்ளவிடத்து, நீதிமன்றத்தினால்

அத்தவறு தொடர்பில், அத்தகைய நீதிமன்றத்தினால் விதிக்கப் படக்கூடியதாயிருந்த வேறு ஏதேனுமொரு தண்டனைக்கு மேலதிக மாக, கட்டளையில் குறிப்பிடப்பட்டுள்ள காலத்தினுள் அத்தகைய பணத்தொகையை அத்தகைய ஊழியருக்கு செலுத்துமாறு தொழிலதிபருக்கு கட்டளையிடப்படக்கூடியதாதல் வேண்டும் ; மேலும் அத்தகைய பணத்தொகை அவ்வாறு செலுத்தப்படா துள்ளவிடத்து, அப்பணத்தொகையானது நீதிமன்றத்தினால் விதிக்கப்பட்ட அபராதத் தொகையைப்போன்று நீதிமன்றத்தின் கட்டளையின்மீது அறவிடப்பட்டு அத்தகைய ஊழியருக்கு செலுத் தப்படக்கூடியதாதல் வேண்டும்.

ஒழுங்கு படுத்துதல்.

**11.** (1) இச்சட்டத்தின் கொள்கைகளை நடைமுறைப்படுத்து கின்ற மற்றும் ஏற்பாடுகளை அமுலாக்குகின்ற கருமத்தின் பொருட்டு அமைச்சரால் கட்டளைகள் ஆக்கப்படக்கூடியதாதல் வேண்டும்.

(2) அமைச்சரால் ஆக்கப்படுகின்ற ஒவ்வொரு கட்டளையும் வர்த்தமானப் பத்திரிகையில் வெளியிடப்படுதல் வேண்டுமென்ப தோடு, அவ்வாறு வெளியிடப்பட்ட திகதியிலிருந்து அல்லது கட்டளையில் குறிப்பிடப்பட்டுள்ள குறிப்பிட்டதொரு தினத்தி லிருந்து அது நடைமுறைக்கு வருதலும் வேண்டும்.

(3) அமைச்சரால் ஆக்கப்படுகின்ற ஒவ்வொரு கட்டளையும் அது வர்த்தமானப் பத்திரிகையில் வெளியிடப்பட்டதன் பின்னர் இயலுமான விரைவில் அங்கீகாரத்திற்காக பாராளுமன்றத்திற்குச் சமர்ப்பிக்கப்படுதல் வேண்டும். அவ்வாறு அங்கீகரிக்கப்படாத ஒவ்வொரு கட்டளையும், அதன் அங்கீகாரத் திகதியிலிருந்து, ஆயினும் அதன்கீழ் முன்னர் ஆற்றப்பட்ட எதற்கும் அதன்மூலம் பாதிப்புகள் ஏற்படாதவாறு, இல்லாதொழிக்கப்பட்டதாகக் கருதப்படுதல் வேண்டும்.

(4) அமைச்சரால் ஆக்கப்பட்ட ஏதேனுமொரு கட்டளை அவ்வாறு இல்லாதொழிக்கப்பட்டதாக கருதப்படுவதாயின், குறிப்பிட்டதொரு தினத்தில் அத்திகதி பற்றிய அறிவிப்பு வர்த்தமானப் பத்திரிகையில் வெளியிடப்படுதல் வேண்டும்.

**12.** இச்சட்டத்தின் கொடுப்பனவானது ;

(அ) ஊழியர் சேமலாப நிதியம், ஊழியர் நம்பிக்கைப் பொறுப்பு நிதியம் மற்றும் ஏற்புடைய ஓய்வூதிய நிதியம்;

(ஆ) வருடாந்த லீவுப் பணிக் கொடுப்பனவு ;

(இ) மேலதிக நேரப் பணிக்கொடுப்பனவு ;

(ஈ) மகப்பேற்று நலக் கொடுப்பனவுகள் ; மற்றும்

(உ) பணிக்கொடை.

இச்சட்டத்தின்கீழ் கிடைக்க வேண்டிய கொடுப்பனவுகள் ஊழியரின் வேதனத்தின் அல்லது சம்பளத்தின் ஒரு பகுதியாக இருக்க வேண்டுமென்பது.

ஆகியவற்றின்பொருட்டு ஊழியர்களின் சம்பளம் மற்றும் பணிக் கொடுப்பனவுகள் வகையினை உள்ளடக்கியதாகவும் ஏற்புடைய தானதாகவும் கருதுதல் வேண்டும். இச்சட்டம் ஏற்புடையதாகின்ற ஒவ்வொரு ஊழியரின் தொழிலதிபரும் குறிப்பிட்ட ஊழியருக்கு எழுத்திலானாலான சட்டத்தின்கீழ் குறித்த சம்பளமும் பணிக் கொடுப்பனவுகளும் செலுத்தப்படுதல் வேண்டுமெனக் கட்டளை யிடப்பட்டுள்ள காலகட்டத்தினுள் இக்கொடுப்பனவைச் செலுத்து தல் வேண்டும்.

**13.** சொற்பிரயோகங்கள் தொடர்பில் வேறு பொருள்கோடல் தேவைப்பட்டாலன்றி இச்சட்டத்தில் -

பொருள் கோடல்.

“கூட்டு ஒப்பந்தம்” என்பதன்மூலம் கைத்தொழில் பிணக்குகள் சட்டத்தில் அதற்கு வழங்கப்பட்டுள்ள அதேபொருள் கருதப்படும் ; (அத்தியாயம் 131)

“ஆணையாளர்” என்பதன்மூலம் அப்போதைக்கு தொழில் ஆணையாளராகப் பதவிவகிக்கின்ற ஆள் கருதப்படு வார் என்பதோடு, பிரதி தொழில் ஆணையாளராக அல்லது சிரேஷ்ட உதவி தொழில் ஆணையாளராக அல்லது உதவி தொழில் ஆணையாளராக அல்லது

தொழில் உத்தியோகத்தராக அப்போதைக்கு பதவி வகிக்கின்ற எவரேனும் ஆளொருவரும் இதில் உள்ளடங்குவார்.

“கூட்டுறவுச் சங்கம்” என்பதன்மூலம் 1972 ஆம் ஆண்டின் 5ஆம் இலக்க, கூட்டுறவுச் சங்கங்கள் சட்டத்தின்கீழ் பதிவுசெய்யப்பட்டுள்ள அல்லது பதிவுசெய்யப்பட்டுள்ளதாகக் கருதப்படுகின்ற கூட்டுறவுச் சங்கமொன்று கருதப்படும்.

“அடிப்படைச் சம்பளம்” என்பதன்மூலம் மேலதிக நேரக் கொடுப்பனவு மற்றும் ஏனைய சகல மேலதிகக் கொடுப்பனவுகள் தவிர்ந்த, நாளொன்றுக்கு எட்டு மணி நேரம் வேலை செய்துள்ளார் எனக் கருதி ஒரு மாதத்திற்குச் சேவை செய்த நாட்களின் எண்ணிக்கையின்படி, கணக்கிடப்பட்ட தொகை கருதப்படும் துண்டு முறையின்கீழ் அல்லது சேவை செய்த காலப் பகுதியைக் கருத்திற் கொண்டு சம்பளம் கணக்கிடப்படும். ஊழியர்கள் தொடர்பில், மேலதிக நேரக் கொடுப்பனவு மற்றும் ஏனைய சகல மேலதிக கொடுப்பனவு தவிர்ந்த, எட்டு மணி நேரம் வேலை செய்துள்ளார் எனக் கருதப்பட்டு, ஒரு மாதத்தில் சேவை செய்யும் நாட்களின் எண்ணிக்கைக்கேற்ப கணிப்பிடப்படும் சம்பளமானது அடிப்படைச் சம்பளமாகும் ;

“வருவாய்” என்பதன்மூலம் 1958 ஆம் ஆண்டின் 15 ஆம் இலக்க, ஊழியர் சேம நிதியச் சட்டத்தில் அதற்கு வழங்கப்பட்டுள்ள பொருள் கருதப்படும்.

“தொழிலதிபர்” என்பதன்மூலம் ஏதேனுமொரு கைத்தொழிலில், எந்தவொரு சேவை நிலையத்திலும் தமக்காக எவரேனுமொரு ஊழியரை சேவையில் ஈடுபடுத்துகின்ற எவரேனும் ஆளொருவர் அல்லது வேறு எவரேனும் ஆளொருவரால் ஊழியர் ஒருவர் சேவையில் ஈடுபடுத்தப்படுவது எவரேனுமொரு ஆளுக்காக

வெனில் அத்தகைய ஆளொருவர் கருதப்படுவார் என்பதோடு ஏதேனுமொரு கைத்தொழிலில் வேறு எவரேனும் ஆளொருவருக்காக எவரேனுமோர் ஊழியர் சேவையில் ஈடுபடுத்தப்படுவது எவரேனும் ஆளொருவ ராலாயின் அத்தகைய ஆளும் அதில் உள்ளடங்குவார்.

“கைத்தொழில்” என்பதில் தொழிலதிபர் ஒருவரால் அல்லது ஊழியர் ஒருவரால் பேணிவரப்படுகின்ற, நிறைவேற்றப்படுகின்ற அல்லது கொண்டுநடாத்தப்படு கின்ற ஏதேனுமொரு தொழில்நுட்ப தொழில்முயற்சி யொன்று, வர்த்தக தொழில் முயற்சியொன்று, கருத் திட்டமொன்று, தொழிற்சங்கமொன்று, வீட்டுப் பணியாளர் வளவொன்று அல்லது வாழ்வாதார மொன்று மற்றும் ஏதேனுமொரு கைத்தொழிலின் ஏதேனுமொரு பிரிவு அல்லது அவ்வாறானதொன்றின் ஏதேனுமொரு நடவடிக்கை அல்லது செயற்பாடு உள்ளடங்குகின்ற போதிலும், தொழிலதிபர் என்ற நிலையில் அரசாங்கத்தினால் முழுமையாக மூலதனம் வழங்கப்பட்ட ஏதேனுமொரு கூட்டிணைக்கப்பட்ட அல்லது கூட்டிணைக்கப்படாத சபையொன்றினால் பேணிவரப்படுகின்ற அல்லது நன்கொடை என்ற வகையில் சிறுவர் குற்றவாளிகளுக்கு அல்லது அநாதை களுக்கு அல்லது நிர்க்கதியான, ஊமைகள், செவிப்புல னற்றோர், கட்புலனற்றோர் ஆகியோருக்கு கைத்தொழி லில் பயிற்சி வழங்கும் பொருட்டு பேணிவரப்படுகின்ற ஏதேனுமொரு கைத்தொழில், வர்த்தக தொழில் முயற்சி அல்லது வியாபாரம் மற்றும் 2015 ஆம் ஆண்டின் திருத்தப்பட்டவாறான இடைக்கால அரச வரவு செலவுத் திட்டத்தின்கீழ் கட்டாய சம்பள அதிகரிப்பு ஏற்புடையதாகின்ற நிறுவனமொன்று இதில் உள்ளடங்காது ; மேலும் ;

"ஊழியர்" என்பதன்மூலம் ஏதேனுமொரு கைத்தொழிலில், தொழில்நுட்ப தொழில்முயற்சியில், வர்த்தக தொழில் முயற்சியில், கருத்திட்டத்தில், வீடுசார்ந்த வளவில் அல்லது வாழ்வாதாரத்தில் ஏதேனுமொரு வேலையை வாய்மூலமான அல்லது எழுத்துமூலமான அல்லது வெளியிடப்பட்ட அல்லது மறைமுகமான ஒப்பந்த மொன்றின் கீழ் செய்வதற்கு எவரேனுமொரு தொழிலபதிபரால் சேவையில் ஈடுபடுத்தப்பட்டுள்ள ஆளொருவர் கருதப்படுவார் என்பதோடு அதில் ஏதேனுமொரு எழுத்துமூலமான சட்டத்தின் அல்லது வேறுவிதத்தில் சம்பளம் அல்லது வேதனம் ஒழுங்கு முறையாக்கப்பட்டுள்ள ஊழியர் ஒருவர் மற்றும் துண்டு அடிப்படையில் செலுத்துவதற்கு சேவையில் ஈடுபடுத்தப்பட்டுள்ள ஊழியர் ஒருவர் உள்ளடங்குவார்.

**14**. இச்சட்டத்தின் சிங்கள, தமிழ் உரைகளுக்கிடையே ஏதேனும் ஒவ்வாமை ஏற்படும் பட்சத்தில், சிங்கள உரையே மேலோங்கி நிற்றல் வேண்டும்.

*ஒவ்வாமை ஏற்படும் பட்சத்தில் சிங்கள உரை மேலோங்கி நிற்றல்.*

பாராளுமன்றத்தின் சட்டமூலங்களினதும் சட்டங்களினதும் தமிழ்ப் பிரதிகளின் வருடாந்த சந்தா (உள்நாடு) ரூபா 1,387 : (வெளிநாடு) ரூபா 1,849 : ஒவ்வோராண்டும் திசெம்பர் மாதம் 15 ஆந் தேதிக்கு முன் எதிர்வரும் ஆண்டுக்கான சந்தாப்பணம் அத்தியட்சகர், அரசாங்க வெளியீட்டலுவலகம், அரசாங்க தகவல் திணைக்களம், இல. 163, கிருலபனை மாவத்தை, பொல்ஹேன்கொடை, கொழும்பு 05 என்ற விலாசத்திற்கு அனுப்பப்பட வேண்டும்